★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் செற் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு ஏற்ப பட்டுப் புடைவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கு
RASI
ராசி சில்க்ஸ்

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 22 வெள்ளிக்கிழமை (04 – 02 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 69

# தப்பியோடிய அரச படையினரைத் தேடிப்பிடிக்கும் முயற்சி மும்முரம்!

## பொலீஸாருக்கு விசேட பணிப்பு

கொழும்பு, பெப்ரவரி 4

ஸ்ரீலங்கா அரச படைகளில் இருந்து சொல்லாமல் கொள்ளாமல் தப்பியோடிய சிப்பாய்களைக் கைது செய்யும் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டிருப்பதாக நம்பத் தகுந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி. பி. ஸி. அறிவித்தது

இது தொடர்பாக பொலீஸாருக்கு விசேட பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாகவும் அறியவருகிறது.

வடக்கு – கிழக்கு யுத்தம் நடத்தப்படும் விதம் குறித்து கவலைப்படும் கீழ் நிலை இராணுவத்தினரே பெரும்பாலும் தப்பியோடுகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆயுதங்களைக் கையாளுவதில் பயிற்சி பெற்ற சிப்பாய்கள் இராணுவத்தில் இருந்து தப்பியோடிய பின்னர், சுதந்திர உலகில் நிம்மதியாக வாழ வியலாத நிலையில் பல்வேறு பகுதிகளில் கொள்ளையர் குழுக்களுடன் சேர்ந்து வீடுடைத்தல், வழிப்பறி நடத்தல் முதலான குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது.

தப்பியோடிய சிப்பாய்களில் சிலர் முக்கிய அரசியல் வாதிகள் மூலம் பாதுகாப்புத்தேடிக் கொண்டு அரசாங்க நிறுவனங்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் திருவிளையாடலால்

## கடித முகவரி ஒருவருக்கு! கடிதம் வேறு ஒருவருக்கு!!

### மடல்கள் மாறியதால் பலர் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 4

வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்து தங்களுக்கு முகவரியிடப்பட்டு அனுப்பப்பட்ட கடித உறைகளில் வேறு எவருக்கோ எழுதப்பட்ட கடிதம் இருந்தது கண்டு சிலர் ஏமாற்றமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்பட்ட வெளியூர் கடிதங்களைப் பெற்ற சிலருக்கு இந்த அனுபவம் ஏற்பட்டது.

'கோமாரி' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட வெளியூர் தபால்கள் கடந்த சில நாட்களாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பெரும்பாலான கடிதங்கள் கிழிக்கப்பட்டு பின்னர் ஒட்டப்பட்ட நிலையிலேயே இங்குவந்து சேர்ந்துள்ளன.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சர்ச்சைக்குரிய சிங்களபடம் இன்றுமுதல் திரையிடப்படும்

### இடைக்காலத் தடை உத்தரவு ரத்து

கொழும்பு, பெப். 4

சர்ச்சைக்குரிய ''நொமியென மினிசு'' என்ற சிங்களத் திரைப்படத்தை திரையிடுவதற்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவை விசாரணையின் பின்னர் கொழும்பு மாவட்ட நீதிபதி ஏ. எம். சோமவன்ஸ நேற்று ரத்துச் செய்து தீர்ப்பளித்தார்.

எனவே இத்திரைப்படம் திட்டமிட்டபடி இன்று முதல் திரையிடப்படும் என்று தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

உபசபாநாயகரான பிரபல நடிகர் காமினி பொன்சேகா இத்திரைப்படத்தை இயக்கி அதில் நடித்தும் இருக்கிறார்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

## 30 ஆயிரம் இலங்கையருக்கு லெபனானில் வேலை!

### அந்நாட்டுப் பிரதமர் இணக்கம்

போரினால் அழிவுற்ற லெபனானின் தலைநகர் பேரூட்டைக் கட்டி எழுப்பும் பணியில் 30 ஆயிரம் இலங்கையருக்கு வேலைவாய்ப்பு அளிக்க லெபனான் பிரதமர் ஒத்துக்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது

ராஜாங்க அமைச்சர் காமினி லொக்குகே பேரூட்டுக்கு விஜயம் செய்தபோது அவருக்கு இது சம்பந்தமான தகவல் தெரிவிக்கப்பட்டது.

தச்சு வேலை, மேசன் வேலை முதலானவற்றுக்கு தேவையான பயிற்றப்பட்ட தொழிலாளர்களுக்கும், சாரதிகளுக்குமே அங்கு தொழில் வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ–எ)

## கொழும்பு விஞ்ஞானபீடம் திடீரென மூடப்பட்டது

கொழும்பு, பெப். 4

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடம் நேற்று மாலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானபீட மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழக வளவு தடை செய்யப்பட்ட பகுதியாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று காலை ஆய்வுகூடமொன்றில் வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் இடம்பெற்ற ஒரு சம்பவம் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும்—

இந்தச் சூழ்நிலையில் விஞ்ஞான பீடத்தை தற்போது மூடிவிடுவதென்று உபவேந்தர் தீர்மானித்துள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## யெல்ட்சின் ஜோர்ஜியாவுக்கு வந்தவேளை குண்டுவெடிப்பு

### பிரதி பாதுகாப்பு அமைச்சர் பலி!

ரிபிலிஸி, பெப். 4

ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் ஜோர்ஜியாவுக்கு விஜயம் செய்த முதல் நாள், தலைநகர் ரிபிலிஸியில் இடம்பெற்ற இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் ஜோர்ஜியாவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் நிகொலாய் கவிலிச் கொல்லப்பட்டார்.

முதலாவது குண்டு வெடிப்புச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்ற போது, வீட்டில் இருந்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கொல்லப்பட்டார் என்றும் —

சில மணித்தியாலங்கள் கழித்து இடம்பெற்ற இரண்டாவது குண்டு வெடிப்பில் பாதுகாப்பு அமைச்சர் காயமடைந்தார் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது.

ரஷ்ய ஆதரவு படையினரே இரண்டு குண்டுத் தாக்குதல்களையும் மேற்கொண்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜோர்ஜியாவில் ரஷ்யாவுக்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## 22 ஆயிரத்து 500 படையினர் இதுவரை தப்பியோட்டம்

கொழும்பு, பெப். 4

கடந்த வருடம் வரை 131 அதிகாரிகள் உட்பட 22 ஆயிரத்து 547 படையினர் இராணுவத்தை விட்டுத் தப்பியோடியிருப்பதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இராணுவத்தைச் சேர்ந்த 58 அதிகாரிகள், தொண்டர் படையின் 25 அதிகாரிகள், 48 கடேற் அதிகாரிகள் படையைவிட்டு ஓடியுள்ளனர்.

தப்பியோடிய சிப்பாய்களில் 12 ஆயிரத்து 302 பேர் நிரந்தர இராணுவப் படையைச் சேர்ந்தவர்கள். 3 ஆயிரத்து 741 பேர் தொண்டர் படையையும் 6 ஆயிரத்து 348 பேர் தேசிய காவல் படையையும் சேர்ந்தவர்கள்.

குருநாகல், கம்பஹா, அனுராதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த சிப்பாய்களே பெரும் எண்ணிக்கையில் படையை விட்டு ஓடியுள்ளனர். (உ)

## ஆரியரத்னாவின் துணைவியார் யாழ். வருகை

லங்கா ஜாதிக சர்வோதய சிரமதான சங்கத்தின் தலைவர் ஏ. ரி ஆரியரத்தினாவின் மனைவி கலாநிதி திருமதி ஆரியரத்தினாவும், ஆரியரத்தினாவின் செயலாளர் திரு. ஜெஹான் பெரேராவும், சுற்றுச் சூழல், நாடாளுமன்ற விவகார அமைச்சின் செயலாளர் திரு. தேவநேசன் நேசையாவும் நாளை காலை பருத்தித்துறையை வந்தடைவர்.

இவர்கள் மூவரும் விமான மூலம் பலாலியை வந்தடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## சரணடையும்சிப்பாய்களுக்கு மட்டுமே பொதுமன்னிப்பு!

தாமாக முன்வந்து சரணடைந்த சிப்பாயகளுக்கு மட்டுமே பொது மன்னிப்பு வழங்கும் திட்டம் ஒன்று பரிசீலிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாக பி. பி. ஸி. சிங்களச் சேவையில் அறிவிக்கப்பட்டது.

இதன்படி தப்பியோடிய பின்னர் கைது செய்யப்படும் சிப்பாய்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படமாட்டாது என்பது தெரிய வருகிறது.

இதே வேளை —

சிப்பாய்கள் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடுவதும்—

தென் இலங்கை சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேர்வதற்கு தயக்கம் காட்டுவதும் —

முப்படைகளுக்கும் தற்போது பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிந்தன. (உ-6)

## கொள்ளையில் ஈடுபட்ட படையினர் விளக்கமறியலில்

கொழும்பு, பெப். 4

கொள்ளை வழக்கு ஒன்று தொடர்பாக இராணுவச் சிப்பாய்கள் நால்வரை 14 நாள் விளக்கமறியலில் வைக்கும்படி புறக்கோட்டை நீதிவான் திருமதி என். சி. ரி. கே. சன்னாஸ்கல உத்தரவிட்டார்.

உல்லாசப் பயணச் சபை அதிகாரி ஒருவர் அணிந்து இருந்த தங்கச் சங்கிலி கைக்கடிகாரத்தையும் பறித்தார்கள் என்ற சந்தேகத்தின் மீது இந்த நால்வரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## முச்சந்தி முனி



டிமிக்கி குடுத்ததுக்கு பரிசாய் உந்தப் பதவியைக் குடுத்திருப்பினம் போல......!

## ஓய்வூதியருக்கு மார்ச் முதல் மேலதிக அலவன்ஸ் கிடைக்கும்

யாழ்ப்பாணம், பெப். 4

1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்களுக்கு, 1994 வரவு செலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் ஓய்வூதிய முரண்பாட்டை நீக்குவதற்கான மேலதிக அலவன்ஸ் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஓய்வூதியர்களுக்கு மேலதிக அலவன்ஸை அடுத்த மாதம் தொடக்கம் வழங்குவதற்கு யாழ். செயலக ஓய்வூதியக் கிளை நடவடிக்கை எடுத்து வருகிறது.

சிவில், விதவைகள் - அனாதைகள், ஆசிரியர்கள், படையினர் ஆகிய நான்கு வகை ஓய்வூதியர்களுக்கும் அவர்களது ஓய்வூதிய இலக்க வாரியாக மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும்.

நான்கு வகை ஓய்வூதியர்களின் ஓய்வூதிய இலக்கங்கள் இரு பிரிவுகளாக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரிவு விவரங்களை அறிய விரும்புவோர் யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை, 15 ஆம் இலக்கத்தில் உள்ள ... பில் அதனைப் பார்வையிடலாம்.

முதலாவது இலக்கப் பிரிவினருக்கு மேலதிக அலவன்ஸ் தொகை பின்வருமாறு அமையும்:-

1,500 ரூபா வரை ஓய்வூதியம் பெறுவோருக்கு — 100 ரூபா.

1,501 ரூபா தொடக்கம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### அடிக்கடி பறந்த விமானங்கள்

யாழ்ப்பாணம், பெப். 4

குடாநாட்டு வான் பரப்பில் நேற்று விமானங்கள் அடிக்கடி பறந்து திரிந்தன.

நேற்று நண்பகலுக்குப் பின் பலாலி விமானத் தளத்துக்கு அடிக்கடி விமானங்கள் வந்து தரையிறங்கிச் ... அவதானிக்க முடிந்தது.

### கோமாரி நாளையே புறப்படும்

யாழ்ப்பாணம், பெப். 4

பருத்தித்துறையில் இருந்து இன்று புறப்படவிருந்த 'கோமாரி' கப்பல் காலநிலை சீரில்லாததால் இன்று புறப்படமாட்டாது என்றும்—

நாளை சனிக்கிழமையே அது இங்கிருந்து புறப்படும் எனவும் யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் நேற்று அறிவித்தார். (உ-5)

## தப்பியோடிய சிப்பாய்க்கு சமாதான நீதிவான் பதவி!

கொழும்பு, பெப். 4

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய சிப்பாய் ஒருவர் அகில இலங்கைக்குமான சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இவர் வடமேல் மாகாணத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று பி.பி.ஸி சிங்களச் சேவையில் தகவல் வெளியாகியிருக்கிறது.

மேலும் இச் சிப்பாய் அரச நிறுவனம் ஒன்றில் தொழிலாளியாகப் பணியாற்றி வந்தார் என்றும் —

பின்னர் அவர் முக்கிய அரசியல் கட்சி ஒன்றிற்காக அரசியல் பணியில் ஈடுபடுவதற்காக விடுவிக்கப்பட்டார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## அகதிகளுக்கு இடமளிப்பதை குறைப்பதற்கு கனடா முடிவு

ஒட்டாவா, பெப். 4

கனடா நாட்டினுள் அனுமதிக்கப்படும் வெளிநாடுகளைச் சேர்ந்த அகதிகளின் எண்ணிக்கையை குறைக்கும்படி அந்த நாட்டின் வலதுசாரி எதிர்க்கட்சி கோரியுள்ளது.

இதனையடுத்து—

அனுமதிக்கப்படும் அகதிகளின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைக்க கனடாவின் புதிய ஆளும் கட்சியான லிபரல் கட்சி தீர்மானித்திருக்கிறது.

பிரிந்துள்ள குடும்பங்கள் மீண்டும் இணைவதற்கு வசதியளிக்கும் வகையிலும்—

கனடாவின் பொருளாதாரத்துக்கும் தொழிலாளருக்கும் உள்ள தேவைக்கு ஏற்பவும்—

வெளிநாட்டினரை நாட்டினுள் அனுமதிப்பதில் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் கனேடிய குடிவரவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கனடாவில் அனுமதிக்கப்படும் அகதிகளில் பெரும்பாலானோர் படித்தவர்களாக இருப்பதால் உயர்தொழில் வாய்ப்புகள் கனடாவாசிகளுக்கு கிடைக்காமல் போய்விடுகின்றன என்றும் வலதுசாரி எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது. (த-எ)

## மட்டக்களப்பில் ராணுவம் குவிப்பு!

### சோதனைச் சாவடிகளும் அதிகரிப்பு

மட்டக்களப்பில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் படையினர் பலப்படுத்தியுள்ளனர். புதிதாகப் பல இடங்களில் சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சித் தேர்தலையொட்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான மாநாடு ஒன்று கடந்த சில நாட்களின் முன் அங்கு நடைபெற்றதாகவும்—

இராணுவ பொலீஸ் உயர் அதிகாரிகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதில் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பைக் காரணம் காட்டி மேலதிக இராணுவத்தினர் மட்டக்களப்பில் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை—

கடந்த ஞாயிறன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கோவில்போரதீவு, பெரிய போரதீவு, முனைத்தீவு ஆகிய கிராமங்களை சுற்றிவளைத்த படையினரும், ரெலோ குழுவினரும் அங்கு தேடுதலை நடத்தியுள்ளனர். [உ-5]

## தமிழ்க் குழுக்கள் ஏற்பாடு செய்த பிரிட்டிஷ் எம்.பிகளுடனான சந்திப்பு இடம் பெறவில்லை

பிரிட்டனில் உள்ள தமிழ்க் குழுக்களுக்கும் பிரிட்டிஷ் எம். பிக்களுக்கும் இடையே நடத்தப்படவிருந்த சந்திப்பு திட்டமிட்டபடி நடக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசு செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, இச்சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டதாகவும், நிலைவரம் பற்றி விளக்கம் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அச்சந்திப்பில் கலந்து கொள்ளவிருந்த பிரிட்டிஷ் எம். பிக்கள் அச்சந்திப்பில் கலந்து கொள்ளாதிருக்க இணங்கினர் என்றும் —

இலங்கை வெளியுறவு அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

லண்டனில் உள்ள தமிழ்க் குழுக்கள் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து இலங்கையின் வடக்கு-கிழக்கு நிலைவரம் குறித்து அவர்களுக்கு விளக்கமளிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே. [உ-த-எ]

## சமாதானக் கதவைத் திறக்க சேர்ந்து முயற்சி செய்வோம்

### மெதடிஸ்த தூதுக்குழு பிரதிநிதி உரை

வடமராட்சி, பெப. 4

'நாட்டில் சமாதானம் ஏற்பட சமயத் தலைவர்கள் உயர்மட்டத்தில் முயற்சி எடுத்து வருகின்றனர். சமாதானத்துக்கான கதவுகள் திறக்கப்பட நாம் அனைவரும் சேர்ந்து முயற்சிப்போம்'

மெதடிஸ்த திருச்சபை நல்லெண்ணத் தூதுக் குழுவைச் சேர்ந்த வண. எப நேசன் யோசவ் முன்கண்டவாறு கூறினார்.

நேற்றுப் பிற்பகல் மந்திகை ஆஸ்பத்திரியில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கு கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் படும் துன்ப துயரங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற நோக்குடனேயே நாம் இங்கு வந்துள்ளோம். இங்குள்ள நிலைமைகளை எமது குழுவைச் சேர்ந்த குருவானவர்கள் சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறுவார்கள். நாட்டில் உள்ள பிரச்சினை தீர்ந்தால்

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: C. மகேசன் 286, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகில், யாழ்ப்பாணம். (29216)

நல்ல இன 45 நாள் அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: குகன், 15/2, ஓடை ஒழுங்கை, (ராதா லேன்) யாழ்ப்பாணம். (29249)

### தேவை

மரக் கடைச்சல் வேலையில் திறமையும் அனுபவமும் உள்ளவர்கள் தேவை. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். யுனிரெக் பொறியியல் நிறுவனம், வெலிங்டன் சந்தி, யாழ். நகர். (29248)

### றோணியோ பிரதி

100 பிரதிகள் இருபக்கமும் பிரதிசெய்ய 30 ரூபா, ரைப்பிங் 8 ரூபா, பேப்பர் (தரம்-I) 60 சதம் மட்டுமே. அறவிடப்படுகிறது. குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். அறிவகம் புத்தகசாலை, 874, மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் சந்திக்கருகில்), யாழ்ப்பாணம். (சி-7214)

### திருத்த வேலைகள்

சகல மணிக்கூடுகள் றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும், டில்தா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-7215)

### விவசாய சாதனங்கள்

நீரியா உரம், சக்தி இயற்கை பசளை (கூட்டெரு), மார்க்கோசின் - பூச்சிகொல்லி விவசாயிகள் நலன் கருதி கைதடி இறைவடிங் மில்லிலும் விற்பனையாகின்றது. ''மில்க்வைற்'' (சி-7171)

### பாலர் ஆசிரியர் பயிற்சி

கடைசித் தகைமை க.பொ.த. (சா/த) சனி, ஞாயிறு நேரில் கற்க முடியாதோர், தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6942)

### தவறிவிட்டது

மைதிலி பாலகிருஷ்ணன் ஆகிய நான் கல்லூரியிலிருந்து பலாலி வீதியூடாகச் செல்லுகையில் இல. 725291434 V தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் Y. G. மெடிக்கல் (ஆஸ்பத்திரிக்கு முன்பாக) என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (29234)

21-01-94 வெள்ளிக்கிழமை பி.ப. 4-15 மணிக்கு சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க தலைமை அலுவலகத்திற்கு முன்னால் டயறி, திறப்பு, குடை ஆகியவற்றுடன் பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க. இராசகுலேந்திரன் பொதுநூலகம், சாவகச்சேரியில் கொடுத்து உரிய சன்மானம் பெற்றுக் கொள்ளவும். (சி-7170)

### கணிதம் (O/L)

உயர் சித்தியடைய கணிதம் (O/L), தனித்தனி கற்கலாம். 35 வருட அனுபவ ஆசிரியர் கற்பிக்கின்றார். வீ. கே. கந்தசாமி, புளியங்கிணற்றடி, ஏழாலை மேற்கு, சுன்னாகம். (6942)

# பிற்போடப்பட்டுள்ளது

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவ ஒன்றியத்தால் நாளை 5-2-1994 பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற இருந்த ''தேனிசைமழை'' தவிர்க்கமுடியாத காரணத்தால் 12-2-1994 அன்று இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

குறிப்பு: 5ஆம் திகதி இடப்பட்ட நுழைவுச் சீட்டுக்கள் 12ஆம் திகதி அன்று செல்லுபடியாகும்.

கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தினர். (29252)

# வலி - மேற்கு உதைபந்தாட்டச் சங்க விசேட பொதுக் கூட்டமும் நிர்வாக சபைக் கூட்டமும்

இடம்: யாழ் / சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மண்டபம்

காலம்: 05 — 02 — 1994

நேரம்: காலை 9-00 மணி (விசேட பொதுக் கூட்டம்)
காலை 10 00 மணி (நிர்வாக சபைக் கூட்டம்)

சகல கழகப் பிரதிநிதிகளும் நிர்வாக சபை உறுப்பினர்களும் தயவு செய்து தவறாது சமுகம் தரவும்.

சேதுவிபுலானந்தா, தலைவர்.
வை. யோகேந்திரன், செயலாளர். துவாரகா, கே கே எஸ் வீதி, சுன்னாகம்.

03 - 02 - 1994

[சி-7172]

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை அறிவித்தல்

மேற்படி சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 9-2-1994 புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் மாவட்ட வைத்திய அதிகாரியின் தலைமையில் நடைபெறவுள்ளது.

1993 ஆம் வருட சந்தாப் பணம் செலுத்திய சகல அங்கத்தவர்களும், தவறாது கலந்து கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

டாக்டர் திரு சி. கதிரவேல்பிள்ளை, தலைவர்.

(6940)

# நர்லெண்ண குழு வருகையை ஒட்டிய பொதுக்கூட்டம்

காலம்: பெப்ரவரி 4ஆம், 5ஆம் (வெள்ளி, சனி) திகதிகளில் மாலை 3-30 தொடக்கம் 5-00 மணி வரை

இடம்: றிம்மர் மண்டபம்

தலைப்பு: ''வடக்கு - தெற்கு:- கிறீஸ்தவ கண்ணோட்டம்''

பேச்சாளர்கள்:
அருட்திரு. நோர்மன் டகட்
அருட்திரு டேவீப் பெர்ணான்டோ
அருட்திரு. எபநேசர் ஜோசப்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- மெதடிஸ்த திருச்சபை யாழ்ப்பாண சேகரம் [சி-7219]

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1994 — 02 — 28 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

*பயிராக்கவியலில் தற்காலிக உதவி விரிவுரையாளர்*

சம்பள அளவுத் திட்டம்:

தற்காலிக உதவி விரிவுரையாளர்:-
ரூபா 5, 270/- (நிலையானது) மாதமொன்றுக்கு

இத்துடன் நிலுவையில் உள்ள வேலை நிறைவேற்றப் படியாக 1994 டிசம்பர் 31 ஆம் திகதி வரை சம்பளத்தின் 25 சத வீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

1993 மே 12 ஆம் திகதிய 9/93 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப் படியாக 600/- ரூபா செலுத்தப்படும்.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும் 20/- ரூபாவை பல்கலைக்கழகத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது நிதிக் கிளையில் செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனக் கிளை) அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். படிவங்களையும் விவரங்களையும் தபால் மூலம் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் 23 x 10 ச. மீ அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரை யொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

- பதிவாளர்

யாழ்ப்பாணப், பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் 1994-01-19. (சி-7167)

# பிறந்த நாள் வாழ்த்து

## கா. கதிர்காமநாதன்

கைதடிச் சந்தியைச் சேர்ந்த கார்த்தி - கதிர்காமநாதன் 26ஆவது பிறந்த நாளை இன்று (04-02-94) சுவிட்சர்லாந்தில் தனது நண்பர்களுடன் சுதந்திரமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, இராசாத்தி அக்கா, அண்ணாமார், ஸ்ரீஸ்கந்தராசா (யாழ் பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய ஊழியர்), செல்வராசா (பாதுகாவலர், கைதடி யூனியன்), சந்திரன், இரவீந்திரன் (கைதடி ஸ்போட்கிளப் உரிமையாளர்), சுந்தரலிங்கம் (கைதடி ஆயுள்வேதம்), மகேந்திரம் (S. P. S. சவுண் ஆசன சேவையாளர்), சித்தப்பாமார், காலஞ்சென்ற மாமி குடும்பத்தினர், சகிலா, ராணி, இரஜேந்திரம் குடும்பத்தினர் (டென்மார்க்), இராமலிங்கம், குணலிங்கம் (உரிமையாளர், குணம் வீடியோ சென்ரர் - கைதடி தெற்கு), இந்திரா குடும்பத்தினர் மற்றும் உறவினர் சுதந்திரமாக பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். [29237]

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.


(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L**

SAT., SUN CLASSES (காலை 8 மணி முதல் மாலை 3-00 மணி)
EVENING CLASSES (மாலை 3-15 மணி முதல் மாலை 6-00 மணி)
DAY CLASSES (காலை 8-15 மணி முதல் பிற்பகல் 2 00 மணி)

★ திறமையால் பிரபல்யமான திறமை மிக்க யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை. [சி-7161]

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் வைத்திலிங்கம் கந்தையா

மண்ணில்: 05 — 04 — 1920
விண்ணில்: 05 — 01 — 1994

நதியொன்று வற்றிப் போனது
வாழ்க்கை நந்தவனம் வரண்டு
போய் விட்டதே ஐயா!
உங்கள் கிளையில் பூத்த புஷ்பங்கள்
கண்ணீர் மழையில் நனைய விட்டுப் போனதென்ன?
கானல் தான் வாழ்க்கையென்று
காட்டிய நீங்கள் சென்ற பாதை என்ன?
புன்னகை பொதிந்த முகம்
போன வழி தெரியவில்லை
தென்றலைத் தந்த பொதிகை
சென்ற இடம் தெரியவில்லை ஐயா!
நீங்கள் திரும்பி வரமாட்டீர்களா,
வரவே மாட்டீர்களா.

இன்று (04 - 02 - 1994) நடைபெறும் அந்தியேட்டி மற்றும் ஆத்ம சாந்தி பிரார்த்தனைகளிலும், மதிய போசனத்திலும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி அழைக்கின்றோம்.

கண்ணீர் பூக்களை காணிக்கையாக்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

சுதுமலை தெற்கு, மானிப்பாய். [6941]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் எட்வேட் நல்லையா

(இளைப்பாறிய அதிபர் - வேலணை)

தோற்றம்: 10 — 07 — 1924
மறைவு: 05 — 01 — 1994
திதி: 04 — 02 — 1994

எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் மறைவாலே இதயம் கனக்கிறது
அன்பால் அரவணைத்து கண்ணாக காத்தீர்கள்
எந்நாளும் நினைவுகள் எம்மை விட்டு நீங்காது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 1, 3ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

# வேலை வாய்ப்பு

படித்த பணிப்பெண் தேவை

பெரிய வீடொன்றில் (சிறிய குடும்பம்) சமையல் உதவி உட்பட சகல வீட்டுக் கருமங்களும் திறம்படச் செய்யக்கூடிய நேர்மையும் சுத்தமும் மிக்க ஒரு பெண் உடன் தேவை. கல்வித் தரம் G. C. E. (O/L) ஆனால் குறைந்த கல்வியுடையோர், ஆற்றல் அனுபவ அடிப்படையில் கருதப்படுவர்.

வயது: 16 — 40 வரை

அடிப்படைச் சம்பளம்; ரூபா 500/-
நன்னடத்தை ஊதியம்: ரூபா 150/-
செயல்திறன் ஊதியம்: ரூபா 150/- என

மாதத்திற்கு ரூபா 800/- வரை கொடுக்கப்படும். ஓரிரு வருடங்களின் பின் சிங்கப்பூரில் பணிபுரிய வாய்ப்பும் உண்டு. சான்றிதழ் பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும்.

S. K. குலசேகரம், (ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்) டச்றோட், மீசாலை. (விக்னேஸ்வரா பாடசாலை முன்பாக)

[29218]

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



தூல முகிழ்ப்பு: 18 — 11 — 1941
தூல அவிழ்ப்பு: 02 — 01 — 1994

## அமரர் ச. ச. செல்வராசா

ஸ்ரீமான் ச. ச. செல்வராசா அவர்களின் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரணக் கிரியைகள்

தைமாதம் 22ஆம் நாள் (04 - 02 - 1994) வெள்ளிக்கிழமை காலை 11-00 மணிக்கு அன்னாரது இல்லம் 98, விவேகானந்த மேடு, கொழும்பு - 13 இல் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
திரு. திருமதி தனபாலசிங்கம், (மைத்துனன், சகோதரி)
திருமதி நடராசா இராசமலர்.

4, செட்டித் தெரு, நல்லூர். [29245]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## விஜேக்கு நன்றி; விரைவோம் நாம்

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி கதிரையில் [விபத்தாக வந்து விழுந்த விஜேதுங்கா அரசியல் தந்திரோபாயத்திலும், தகிடுதத்தங்களிலும், தன்னை வளர்ப்பதற்குத் தேவையான சாணக்கியத்திலும், கைவந்தவராக மாறியுள்ளார்!

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை மக்கள் நேரடியாகத் தெரிவுசெய்யும் முறையை மாற்றி, நாடாளுமன்ற உறுப்பினர்களே தெரிவுசெய்யும் முறையைக் கொண்டு வரப்போவதான அறிவிப்பு, குறுகிய காலத்தில் அவர் கற்றுக்கொண்ட அரசியல் குள்ளத்தனங்களைப் பிரதிபலிக்கிறது.

நடைமுறையில் உள்ள அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலை இப்போதில்லை. ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு நாடு முழுவதிலும் நடத்தப்பட வேண்டும். ஆனால் வடக்கு-கிழக்கில் தேர்தல் சாத்தியமில்லை. தமிழர் ஆதரவு கிடைக்கப்போவதில்லை. மலையகத்திலும் தமக்கு ஆதரவாக வாக்குகள் கிடைக்கமாட்டா. சிறுபான்மையினர் தயவில் இல்லாது, அவர்களைப் பொருட்படுத்தாது சிங்களவர்களின் ஜனாதிபதியாகும் திட்டம் இது!

இப்போதுள்ள நாடாளுமன்றம் அடுத்த வருடம் பெப்ரவரி வரை இயங்கலாம். அதன் ஆயுட் காலத்திலேயே உத்தேச புதிய முறையைக் கொண்டு வந்தால் தாம் எவ்வித தடங்கலும் இன்றி ஜனாதிபதியாகி விடலாம். சிறுபான்மையினரின் வாக்குகளோ ஆதரவோ தேவையில்லை: இந்த வாய்ப்பாட்டைப் போட்டுப் பார்த்தே ஜனாதிபதி தேர்தல் முறையை மாற்றும் அறிவிப்பை விஜேதுங்கா வெளியிட்டுள்ளார்.

இத்தனைக்கும், நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றி அமைக்க வேண்டுமா என்பதனை ஆராய்வதையே பிரதான நோக்கமாகக் கொண்டு அரசமைப்புச் சீர்திருத்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. இப்போது பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக மாறிய கதையாகிவிட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவதைத் தடுக்கும் சட்டத்தை திருத்துவதன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில உள்ள 25 பேரை தமது பக்கம் இழுத்துக் கொண்டால் உத்தேச ஜனாதிபதி தேர்தல் முறைத் திருத்தத்துக்குத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறலாம். தானும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவது இலகுவாகிவிடும் என்ற கணக்குடனேயே விஜேதுங்கா கருமமாற்றுகிறார்.

சிறுபான்மையினரின் சம்மதம் இன்றியே 1972, 1978 ஆம் ஆண்டுகளில் அரசமைப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டன. ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுதான் அரசாட்சியில் சிறுபான்மையினர் பங்களிப்பை அற்ப சொற்பமாகவேனும் தேவைப்படுத்திய ஒன்று. அதுவும் மாற்றப்பட்டால் சிறுபான்மையினர் பங்களிப்பில்லாமலே அரசாட்சி நடக்கும். சிங்களவரின் தனியாட்சி ஸ்ரீலங்காவில் உகைறிய வெளிப்படையாகவே நடக்கும்.

தமிழர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் தமக்கென ஓர் அரசை உருவாக்க புதிய தேர்தல் முறை மற்றோர் உந்துதலாக அமையும். அதாவது சமஷ்டி, கூட்டாட்சி என்ற எதனையும் பற்றி அலட்டிக் கொள்ளாமல் தமிழீழ அரசைத் தமக்கென உருவாக்கும் நிர்ப்பந்தத்தைத் தோற்றுவிக்கும்; தமிழருக்கென ஓர் அரசு உருவாகுவது அவசியமே என்பதை உலகத்துக்கு மேலும் நியாயப்படுத்தும்.

அந்த வகையில் விஜேதுங்காவுக்கு நன்றி கூறலாம். ஒரு விதத்தில் தமிழீழம் அமைய வழிவிட்டுக் கொடுக்கிறார். சிங்களவன் நாட்டை விஜேதுங்கா ஆண்டால் என்ன? ரணில் ஆண்டால் என்ன? நமக்கேது கவலை? எமக்கென ஓர் அரசை விரைந்து அமைப்போம்!

# தமிழ்த்தின போட்டி குறித்து கல்விப் பணிப்பாளர் கவலை

யாழ்ப்பாணம், பெப். 4
''தமிழ்த்தினப் போட்டிகளில் இடர் நிகழ்ச்சிகளைத் தயாரித்து பலர் பங்குபற்றுகிறார்கள். இப்போக்குத் தொடருமானால் இப்போட்டிகள் அர்த்தமற்றனவாகிவிடும். பாடசாலைக் கல்வியையும் சீரழிந்துவிடும். இப்போக்கைச் சீராக்குவது அதிபர்களின் பொறுப்பாகும்.''

யாழ்ப்பாணம் வலயம் IIஇன் கல்விப் பணிப்பாளர் திரு க. கந்தசாமி சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வருடந்தோறும் நடைபெறும் தமிழ்த்தினப் போட்டிகளுக்கான ஆயத்த வேலைகள் குறுகியகால அவகாசத்தில் செய்யப்படுவதால் மொழி, கலை ஆகியவற்றில் பரந்த அளவில் மாணவர்கள் பயன் பெறுவதில்லை. பதிலாக ஒருசில தெரிந்தெடுக்கப்பட்டவர்களே லாபம் அடைகிறார்கள். வகுப்பறைக் கற்பித்தலும் குழம்பி பாடத்திட்டங்களும் அரைகுறையாகவே நிறைவேற்றப்படுகின்றன.

கல்விப் பணிப்பாளரின் இக்கடிதத்துடன் மொழித்திறன் அபிவிருத்தித் திட்டம், கலைத்திறன் அபிவிருத்தித் திட்டம் ஆகிய இரண்டு செயற்திட்டங்களும் அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

1994 தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகளில் மாணவர் பலரைப் பங்குபற்ற வைப்பது ஒரு முக்கிய நோக்கமாக அமையவேண்டும் என்று கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-அ)

### தாக்குதல் வேளைகளில்

## படையினர் ஒருவரை ஒருவர் அடையாளம் காண ஏற்பாடு

இராணுவ முகாம்களுக்குள் விடுதலைப் புலிகள் தந்திரமாக உள் நுழைந்து நடத்தும் தாக்குதல்களை முறியடிப்பதற்கும் —

இராணுவத்தினர் தங்களைத் தாங்களே அடையாளங் கண்டு கொள்ளவும் —

உரிய வழிகளை கடைப்பிடிக்குமாறு படையினருக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

முகாம்களில் காலை வேளையில் கடமைக்கு செல்லும் படையினர் அனைவரும் குறித்த ஒரு நிற அடையாளத் துண்டை கையில் கட்டிக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. (உ-5)

## சமாதானத் தூதில் தேரர்கள் ஈடுபட்டால் பயன் உண்டு

### யாழ். அரச அதிபர் ஆலோசனை

பௌத்த மகா நாயக்க தேரர்கள் சமாதானத் தூதில் ஈடுபடுவார்களாயின் ஆக்கபூர்வமான விளைவுகள் ஏற்படும் என்று தாம் நம்புவதாக யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் பி. பி. ஸி. சிங்களச் சேவைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

உயர் நிலை பௌத்த மதத் தலைவர்கள் அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து அரசின் கருத்தை யாழ். குடாவுக்கு எடுத்துச் செல்வது சாலவும் பொருத்தமுடையதாக இருக்கும் என்று தாம் கருதுவதாகவும் அவர் கூறினார். (உ-எ-6)

## வறுமை நிவாரண உணவு முத்திரை

வறுமை நிவாரண உணவு முத்திரையின் 8 ஆவது சுற்றுப்பத்திரத்தின் 10 ஆவது, 11 ஆவது, 12 ஆவது புள்ளிகள் முறையே இவ்வருடம் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதம் வரை செல்லுபடியாகும்.

வறுமை நிவாரண ஆணையாளர் திணைக்களம் சகல பிரதேச செயலாளர்களுக்கும் ப. நோ. கூ. சங்க பொது முகாமையாளர்களுக்கும் இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. (இ-100)

### 1991 ஜூன் இற்கு பின் இடம்பெற்ற

## இராணுவ நடவடிக்கைகளினால் தொழில் இழந்தோருக்கு நஷ்டஈடு

1991 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குப் பின் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது தமது தொழிலை இழந்து பாதிக்கப்பட்டவர்களில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்க யாழ். பிரதேச செயலகம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளின் போது பாதிக்கப்பட்ட விவசாயம், கடற்றொழில், கால்நடை வளர்ப்பு, வர்த்தகம், போக்குவரத்து, விடுதிகள், ரியூற்றரிகள், மற்றும் தொழில் நிறுவனங்கள், போன்றவற்றுக்கு நஷ்டஈடு வழங்கப்பட உள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் யாழ். பிரதேச செயலகத்தினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று தமது பகுதி கிராம சேவகர்கள் ஊடாக விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்படுகின்றது. (த 17)

## கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் வடக்கு கல்வி வலயத்தில் இவ்வாண்டு தமிழ் மொழி, கலைத்திறன் போட்டிகளில் சிறுவர் நாடகத்திற்கான செயன்முறைக் கருத்தரங்கு பின்வரும் ஒழுங்கில் நடைபெறும்.

★ சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டங்கள்:- இன்று காலை மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில்.

★ கரவெட்டிக் கோட்டம்:- நாளை காலை நெல்லியடி ம. ம. வியில்.

★ பருத்தித்துறை, மருதங்கேணி கோட்டங்கள்:- நாளை காலை பருத்தித்துறை வேலாயுதம் ம. வி.

சிறுவர் நாடகங்களைப் பயிற்றுவிக்க விரும்பும் ஆசிரியர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளலாம்.

★ ★ ★

யாழ்ப்பாணம் தெற்கு கல்வி வலயத்தில் யாழ்ப்பாணக் கோட்டத்திற்கு உட்பட்ட அதிபர்களுக்கும், ஒவ்வொரு பாடசாலையிலும் உற்சாகமும் சமூக சேவையில் ஈடுபாடும் உள்ள ஆசிரியர்களுக்குமான சுகாதாரக் கருத்தரங்கு இன்று காலை 8 30 மணி முதல் மாலை 4.30 மணி வரை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் றோட்டறக்ட் கழகம் எஸ். எம். பெர்னான்டோ நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்திவரும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டித் தொடரில் இன்று-

காலை 7 30 மணி முதல் மாலை 5 30 மணிவரை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆடுகளத்தில் டென்னிஸ் போட்டிகளும் —

நண்பகல் 12 மணி முதல் மாலை 5 மணிவரை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் பொது அறையில் சதுரங்கப் போட்டிகளும் இடம் பெறும்.

★ ★ ★

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்று ஆட்டங்களில் இன்றும் நாளையும் பிற்பகல் 3 மணி முதல் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

இன்று:- ஞானமுருகன் எதிர் பாடும்மீன்

நாளை:- டயமன்ஸ் வி. க. எதிர் விநாயகர் வி. க

# இன்று நடப்பவை

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட 75 ஆவது ஆண்டு பவள விழாவையொட்டி நடைபெற்று வரும் கலைப் போட்டித் தொடரில் கிராமிய சம்பாஷணைப் போட்டிகள் இன்று வெள்ளி பிற்பகல் 3 மணிக்கு அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தில் நடைபெறும். (க-5)

★ ★ ★

யாழ் மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் பொதுக்கூட்டமும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறும். (க-17)

★ ★ ★

இணுவில் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையினரின் ஏற்பாட்டில் இன்று வெள்ளி காலை 8-30 மணிக்கு விசேட பூசை ஆராதனை மற்றும் இசை ஆராதனை ஆகியவை இடம் பெறும். (த-30)

★ ★ ★

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான இல்ல வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய பரிசளிப்பு விழாவும் தாபகர் தினமும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் திரு ச. சண்முகலிங்கம் தலைமையில் விழா நடைபெறும். சங்கானை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ம. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ)

★ ★ ★

கனகரத்தினம் ம. ம. வியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் திரு. மு. இராமலிங்கத்தின் சேவை நலன் பாராட்டு விழாவும், புதிய அதிபர் திரு. வி. மாணிக்கத்துக்கு வரவேற்பு உபசாரம் அளிக்கும் நிகழ்வும் இன்று காலை 8.30 மணிக்கு பாடசாலையில் நடைபெறும். பாடசாலை ஆசிரியர் கழகமும் மாணவர் அமைப்புகளும் இணைந்து இந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளன.

★ ★ ★

யாழ் மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் பொதுக்கூட்டமும் இன்று காலை 9 மணிக்கு யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் இடம் பெறும்.

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 4
கூட்டுறவுப் பரிசோதகர் தெரிவுப் பரீட்சை அடுத்த மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் நேற்று யாழ். செயலகத்துக்கு அறிவித்துள்ளார்.

அந்தப் பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி இங்கு நடைபெறும் என யாழ். அரச அதிபர் நேற்று முன்தினம் அறிவித்திருந்தார். பரீட்சை ஒத்திவைக்கப்பட்டதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (உ-5)

## ஆலயங்களில்

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு புனித லூர்த்து மாதா தேவாலய வருடாந்த உற்சவ விழா இன்று நடைபெறும். (உ-117)

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 4
மாதகல் இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை 4 மணிக்கு சுற்றுப்புறக் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகமும் இடம் பெற்றது.

ஷெல்கள், வயல்வெளிகளிலும், பனந்தோப்புக்களிலும் விழுந்து வெடித்தமையினால் பெரும் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை (உ-15)

### கடித முகவரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் கடிதங்களை உடைத்து சோதனை என்ற பெயரில் அவற்றில் உள்ள காசோலைகள் மற்றும் 'டிராப்டுகளை' கையாடிய பின் கடிதங்களை உறைகளில் இட்டு ஒட்டி விடுகின்றனர். படையினரின் இந்த ''திருவிளையாடலின்'' போது உறைகளில் இருந்த கடிதங்கள் மாறி விடுகின்றன. முகவரி வேறாகவும், உள்ளே எழுதப்பட்ட மடல்கள் வேறாகவும் பலருக்கு கடிதங்கள் இங்கே வந்து சேர்ந்திருப்பது தற்போது தெரியவந்துள்ளது.

நீண்ட நாட்களின் பின் கிடைத்த தங்கள் உறவினர்களின் கடிதங்களைக் காணும் ஆவலுடன் உறைகளை கிழித்த சிலர், உள்ளே தமக்கு சம்பந்தமில்லாத வேறு எவருடையதோ கடிதங்கள் இருப்பது கண்டு ஏமாற்றமடைந்துள்ளனர். (உ-5)

### சமாதானக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போதும் என்ற எண்ணமே சாதாரண கிராமப்புற சிங்கள மக்கள் மத்தியில் இருந்து வருகிறது —இவ்வாறு வண. எபெநேசன் யோசப் மேலும் அங்கு தெரிவித்தார்.

மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மந்திகை ஆஸ்பத்திரியில் உள்ள குறைபாடுகளையும் நல்லெண்ண தூதுக்குழுவினர் நேரில் கேட்டு அறிந்து கொண்டனர் (உ-5-173)

### பெல்ட்சின்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குத் தளம் வழங்குவதையும் ரஷ்யத் துருப்புகளுக்கு அங்கு இடமளிப்பதையும் உயிரிழந்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் காயமடைந்த பாதுகாப்பு அமைச்சரும் எதிர்த்து வந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

ரஷ்ய ஜனாதிபதி பெல்ட்சினும் ஜோர்ஜிய ஜனாதிபதி எடுவர்ட் ஷெவர் நாட்சேயும் இரு நாடுகளுக்கு இடையே பாதுகாப்பு மற்றும் பொருளாதார ரீதியிலான ஒத்துழைப்பு வழங்கும் உடன்பாடுகளைச் செய்து கொண்டனர்.

இதன்படி ஜோர்ஜியாவில் ரஷ்ய தளம் ஒன்று அமைக்கப்படும். ரஷ்ய - ஜோர்ஜிய எல்லையில் ரஷ்ய துருப்புகள் நிலைகொள்ள அனுமதி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

### தப்பியோடிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் தொழில் புரிந்து வருகின்றார்கள் என்றும் சொல்லப்படுகின்றது.

தப்பியோடிய சிப்பாய்களை தேடிக் கண்டுபிடிப்பது தொடர்பாக சில திட்டவட்டமான பணிப்புரைகளை பொலீஸ் மா அதிபர் பிராங் டி சில்வா, பிராந்திய பொலீஸ் பிரிவுகளுக்கு விடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ எ 6)

# சிங்களத் தேசியக் கொடியையும், யாப்புகளையும் தமிழர்கள் எதிர்த்துப் போராடியே வந்தனர்

''பெப்ரவரி 4 ஆம் நாள் தமிழீழத்தின் அயல் நாடாகிய ஸ்ரீ லங்காவின் சுதந்திர தினமாகும்''

ஸ்ரீலங்கா நாடு சுதந்திரம் அடைந்த நாளிலே ''வீரகேசரி'' யில் தந்தை செல்வா இவ்வாறு எழுதினார்.

''எமது சிங்களச் சகோதரர்கள் இன்று தமது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறார்கள். இனிமேல் தமிழ் மக்களும் சுதந்திரம் பெற நாம் உழைக்க வேண்டும்'' என்று அர்த்தப்பட அவர் எழுதியிருந்தார்.

சுதந்திர தினம் குறித்து நாடாளுமன்றத்தில் தாம் நிகழ்த்திய உரையிலும் தந்தை செல்வா இதே கருத்தைத் தெளிவுபடுத்தியிருந்தார்.

ஸ்ரீலங்கா நாடு தனது சுதந்திர தினத்தை தனது மண்ணிலே கொண்டாடுவதுடன் நில்லாது தமிழீழ ஆட்புலத்திலும் கொண்டாட முற்பட்டது.

### திருமலைத் தியாகிகள்

அதனால் நேர்ந்த விளைவே திருகோணமலை நகரின் மணிக்கூண்டுக்கோபுரத்தில் சிங்களவரால் ஏற்றி வைக்கப்பட்ட வாளேந்திய சிங்களக் கொடியை அகற்றி விட்டு கறுப்புக் கொடியை திருமலை நடராசன் பறக்கவிட்ட நிகழ்ச்சியாகும்.

இதில் திருமலை நடராசன் சிங்களவர்களின் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகினார்; திருமலைத் தியாகியானார்.

தமிழீழத்தில் வாளேந்திய சிங்களக் கொடியைத் திணிக்கும் முயற்சி அத்துடன் நின்று போகவில்லை.

திரும்பவும் அப்படியானதோர் கொடியேற்று வைபவம் திருமலையில் ஒரு பாடசாலையிலும் நிகழ்ந்தது.

பாடசாலை அதிபர் கல்லூரி மாணவன் மூலம் தருவித்த வாளேந்திய சிங்கக் கொடி ஒன்றைக் கொடிக்கம்பத்தில் ஏற்றி வைத்தார். அப்பொழுது அக்கொடி தீப்பந்தமாக எரிந்து கீழே வீழ்ந்தது. மாணவன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான்.

இந்த இளைஞன் விடுதலையாகிய பொழுது தமிழீழ மண் மீட்புப் போராட்டத்தில் ஆயுதப் போராளியாகத் தன்னையும் இணைத்துக்

## அப்போராட்டங்கள் பெறுமதி பெற சுதந்திரத்தை வென்றெடுக்க வேண்டும்

கொண்டான், தலைவரின் பாசறையில்!

எதிர்பாராது ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் மீசாலையில் நிகழ்ந்த மோதலின்போது தான் காயமடைந்த வேளையிலும், தன்னை மீட்கும் முயற்சியில் தன் சகாக்களும் ஆயுதங்களும் எதிரியிடம் சிக்கிக்கொள்ளாது காக்கும் எத்தனமாக, தன்னைச் சுட்டுக் கொன்றுவிட்டு, ஆயுதங்களுடன் தப்பித்துக் கொள்ளும்படி ஆணையிட்டவனும் அந்த ஆணையை நிறைவேற்றுவித்தவனும் இந்த இளைஞனே.

தானைத் தலைவனின் மைந்தனுக்கு அவன் நினைவாக பெயர் சூட்டப்பட்டது தமிழ் மறவன் வரலாற்றின் விசேட அம்சமாகும்.

இன்று விடுதலைப் புலிகளின் மாபுவழி ராணுவமும் அந்த விடுதலை வீரனின் பெயரையே தாங்கி நிற்கிறது.

சார்ள்ஸ் அன்ரனி சீலனே அம்மாவீரன் ஆவான்.

### வாளேந்திய கொடிக்கு எதிர்ப்பு

கண்டிச் சி[illegible]

வாளேந்திய சிங்கக்கொடியை முழு இலங்கைத் தீவிலும் தேசியக் கொடியாகக் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட்ட பெரிய சேனநாயக்காவின் முயற்சியை முதலில் முறியடித்தவர்கள் வட்டுக்கோட்டைத் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே. கனகரத்தினமும் அவருடைய தலைவர் ஜி ஜி பொன்னம்பலமும் என்பது குறிப்பிடத்தது.

ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றை முன்னவர் முன்மொழிய, பின்னவர் வழிமொழிந்து, சபாநாயகர் மொலமுரேயின் தீர்ப்பை வலியுறுத்தியதன் பேரில் அச்சாதனை நிலைநாட்டப்பட்டது.

இதன் பின்னர் ஒரு தேசியக் கொடியைத் தெரிவு செய்து சிபார்சு செய்யும் பொருட்டு மேல்சபை, சனப் பிரதிநிதிகள் சபை இரண்டையும் உள்ளடக்குவதாக ஒரு தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது.

அந்தக் குழுவின் சிபார்சே தமிழ் - முஸ்லிம் மக்களைக் குறிக்கும் சிவப்பு, பச்சை வர்ணக் கோடுகளை மூலக் கொடியிலிருந்து வேறுபடுத்தும் அகன்ற கரையுடன் கூடிய வாளேந்திய சிங்கக் கொடியாகும்.

இத் தெரிவுக் குழுவின் பரிந்துரை அறிக்கையில் தான் அக் கொடியை நிராகரிக்கும் தமது மறுப்பையும் சேர்த்து இணைத்திருந்தார் மேல்சபை உறுப்பினர் எஸ். [illegible]

தந்தை செல்வா வாளேந்திய [illegible]

பம் தெரிவித்து தமது மோட்டார் வாகனத்தில யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலி மன்னனால் உபயோகிக்கப்பட்டிருந்த 'நந்தி'க் கொடியைப் பறக்க விட்டிருந்தார்.

காந்தியவாதியாகிய யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் தலைவர் ஹண்டி பேரின்பநாயகம் வாளேந்திய சிங்கத்தின் சின்னம் ஓர் நியமமாக தேசியக் கொடியில் இடம் பெறுவதை ஆட்சேபித்தார்.

இத்தீவின் சகல மதத்தினராலும் புனிதமானதாகப் போற்றப்படும் சிவனொளிபாதமலையே தேசியக் கொடியின் சின்னமாக அமைய வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

வவுனியாவின் முதல் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சி. சுந்தரலிங்கம் தேசியக் கொடிப் பிரச்சினை

- த. இன்பராசு -

மீது தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து ஓர் இடைத் தேர்தலை நிர்ப்பந்தித்தார் தேர்தலில் தமக்கு எதிராகப் போட்டியிட்ட அரசாங்கக் கட்சியின் வேட்பாளரை அதிகப்படியான வாக்குகளால் தோற்கடித்தார்.

கிறிஸ்தவ மதகுருமார் உட்படப் பலரால் தேசியக் கொடிக்கு எதிர்ப்புக் காட்டப்பட்டு வந்துள்ளது.

### யாப்புக்களுக்கும் எதிர்ப்பு

இது போலவே, 1972, 1978 ஆம் ஆண்டுகளின் குடியரசு யாப்புகளை தமிழ் மக்கள் பிரதிநிதிகள் நிராகரித்தார்கள்

மேலும் தாம் எவ்வகையிலும் பங்குபற்றிராத மேற்படி யாப்புகளுக்குப் பின்னர் கொண்டுவரப்பட்ட திருத்தப் பிரேரணைகள் மீதான விவாதங்களிலும் வாக்கெடுப்புகளிலும் அவர்கள் கலந்து கொள்ள மறுத்தார்கள்

மிதவாத பாராளுமன்ற அரசியல்வாதிகளே ஸ்ரீலங்காவின் யாப்பை ஏற்றுக் கொள்ளவோ அதற்குக் கட்டுப்படவோ மறுத்தார்கள்.

இந்த நிலைமையில், யாப்பில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கான யோசனைகளை தம்மிடம் தெரிவிக்கும்படி பிரதமர் ரணில் விக்ரமசிங்க விடுதலைப் புலிகளைக் கேட்டுள்ளது அவருடைய அரசியல் அறியாமையைத் தான் காட்டுகிறது.

ஸ்ரீலங்காவின் சுதந்திர தினமாகிய இன்று சிங்களத் தேசியக் கொடி, அரசியல் யாப்பு ஆகியவற்றுக்கு எதிராக தமிழ் மக்கள் நீண்டநெடுங்காலமாக நடத்தி வந்த போராட்டத்தை நாம் நினைவுபடுத்தி எங்கள் மண்ணின் பூரண மீட்புக்கான போராட்டத்தில் எம்மை முழுமையாக இணைத்து தீவிரமாக உழைத்து தமிழீழத்தை வெல்வோமாக!

அப்போதுதான் முந்திய தமிழர் சந்ததியின் போராட்டங்கள் பெறுமதிமிக்கவையாக மாறும். அவர்களின் வியர்ப்பு நல்ல அறுவடை தருவதற்கு தண்ணீர் பாய்ச்சும் கடமை எங்கள் சந்ததியையே சாரும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மாநகரசபை
## குடிநீர் தாங்கிகள் கொள்வனவுக்கான கூறுவிலை

கீழ்க்காணும் அளவுகளையுடைய நீர்த்தாங்கிகளை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகள் எம்மால் கோரப்படுகின்றன.

1. உழவு இயந்திர இழுவைப்பெட்டி அடிச்சட்டத்தில் பொருத்தக்கூடியதான 1000 கலன் கொள்ளளவுள்ள 1/8 அங்குலம் தடிப்பான மெல்லிரும்புத் தகட்டினாலான நீர்த்தாங்கி.
2. 400 கலன் நீர் கொள்ளளவுடைய 1/8 அங்குலம் தடிப்பான கல்வனைஸ்ட் தகட்டினாலான கொள்கலன்.
3. 200 அல்லது 400 கலன் நீர் கொள்ளளவுடைய பிளாஸ்டிக்கிலான கொள்கலன்.

மேற்குறித்த அளவிலான கொள்கலன்கள் வைத்திருப்போர் அவற்றின் எண்ணிக்கையையும், ஒன்றிற்கான விலையையும் உள்ளடக்கிய தமது கூறுவிலையை எதிர்வரும் 11-02-1994 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். கூறுவிலையுடன் தாங்கியின் வடிவமைப்பினைக் காட்டும் வரைபடம் ஒன்றும் இணைக்கப்படுதல் வேண்டும்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
03-02-1994. (சி/7174)

---

யா / நவாலி மகா வித்தியாலயம்
## பரிசு நாள் விழா அழைப்பிதழ் 1994

காலம்:- 05-02-1994 சனிக்கிழமை பி. ப 1-30 மணி
இடம்:- மகாவித்தியாலய திறந்த வெளி அரங்கு
தலைவர்:- திருமதி சி. விஸ்வலிங்கம் (அதிபர்)
முதன்மை விருந்தினர்:- திரு க. கந்தசாமி (கல்விப் பணிப்பாளர் யாழ். வலயம் - 2)

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திச்சபை
பழைய மாணவர் சங்கம்.

(29258)

---

## மலிவு விற்பனை

நவீன சந்தை, சுன்னாகம்.

அன்பான வாடிக்கையாளர்களே எதிர்வரும் சனிக்கிழமை 5-2-94 முதல்

**மாட்டிறைச்சி 1 கிலோ 80 ரூபா**
**ஆட்டிறைச்சி 1 கிலோ 150 ரூபா**

ஆக குறைந்த விலைக்கு விற்பனைக்கு விட உள்ளோம் என்பதை உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

ம. சேகர் த. விஜயன்
(6794)

---

யாழ். வர்த்தகர் சங்கம் விடுக்கும்
## முக்கிய அறிவித்தல்

இன்று 04-02-94 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். வர்த்தகர் சங்கப் பணிமனையில் சகலதுறை வர்த்தகர்களுக்கும் ஓர் முக்கிய கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொள்வார்கள். இக்கூட்டத்தில் வர்த்தகர்களின் மிக முக்கியமான விடயங்கள் பல கலந்துரையாட வேண்டி இருப்பதால் கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சகலதுறை வர்த்தகப் பெருமக்களையும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி
**யாழ். வர்த்தகர் சங்கம்**
(சி 7220)

---

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவு தலைவர் டாக்டர் தியாகராஜாவின் தந்தையார்

### அமரர் சு. வெற்றிலிங்கம்

(இளைப்பாறிய செனட் சபை உத்தியோகத்தர்)

அவர்களது மறைவினால் சோகமுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஸ்தாபனங்களின் சார்பில் அனுதாபங்களைத் தெரிவித்து அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம்.

நிர்வாகசபையினர்கள், உறுப்பினர்கள், தொண்டர்கள்
இ. செ. ச நீர்வேலி அலகுகள்,
நீர்வேலி சுகாதாரக் குழு,
நீர்வேலி தெற்கு ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையம்.
(29259)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04-02-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

---

யாழ் மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கப்
## பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டம் 27-3-1994 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருப்பதால் தீர்மானங்கள் ஏதேனும் கூட்டத்தில் சமர்பிக்க விரும்பின் 25-02-1994 க்கு முன்பாக தீர்மானங்களைக் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு சகல பொதுச் சபை உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

என். இராஜதேவன்,
செயலாளர்.

51, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். 4-2-1994 (29255)

---

## கோல்டன் கொமட் கோழி குஞ்சுகள் விற்பனை

CHRISTOMBU FARM GOLDEN COMET PULLETS, Cockerls கோல்டன் கொமட் பேட்டுக குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு.

**"மல்லிகாபதி"**
சந்தை கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய்.
(29256)

---

## அரசினர் பொது வைத்தியசாலை
யாழ்ப்பாணம்
## அமைய / ஆண், பெண் வெற்றிடங்கள் சுத்திகரிப்பு தொழிலாளிகள்

இவ் வைத்தியசாலையில் அமைய/ஆண், பெண் சுத்திகரிப்பு தொழிலாளிகள் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

1. குறைந்தது 8 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. 10-02-94 ஆம் திகதியன்று 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதுக்கு உட்பட்டவர்களாகவும், இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரர்கள் இவ்வைத்தியசாலையில் இருந்து 5 மைல் சுற்றாடலில் வசிப்பவராக இருந்தால் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் எனது பணிமனையில் 10-02-94 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர்கள் பின்பு என்னால் அறிவிக்கப்படும் திகதியில் எனது பணிமனையில் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

வைத்திய கலாநிதி
செல்வி என். கனகரட்டினம்
பணிப்பாளர்,
அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
(சி-7175)

---

உ
## மிருதங்க அரங்கேற்றம்

யாழ் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தில்
கலாவித்தகர் க. கண்ணதாசன் அவர்களிடம்
(Diploma in Mirudangam - University of Jaffna)
மிருதங்க இசை பயின்ற
**செல்வன் மெற்றாஸ்மயில் கஜன்**
அவர்களின்
## ☆ மிருதங்க அரங்கேற்றம் ★



இடம்: நல்லை ஆதீன கலாமண்டபம் - யாழ்ப்பாணம்
காலம்: 05-02-1994 சனிக்கிழமை 3-00 மணி
தலைவர்: திரு மு. இராமலிங்கம் அவர்கள் (முன்னாள் அதிபர், யாழ். கனகரெத்தினம் ம. மகா வித்தியாலயம்)

### இசையரங்கு

| | |
|---|---|
| இன்னிசை வேந்தர் திரு. பொன். சுந்தரலிங்கம் | — பாட்டு |
| இசைஞான திலகம் திரு. உ. இராதா கிருஷ்ணன் | — வயலின் |
| செல்வன் மெற்றாஸ்மயில் கஜன் | — மிருதங்கம் |
| சங்கீதரத்தினம் திரு. எம். சிதம்பரநாதன் | — கெஞ்சிரா |
| வித்துவான் ப. ரதிரூபன் | — கடம் |
| வித்துவான் திரு. என். சண்முகலிங்கம் | — தம்புரா |

✲ இசை ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம் ✲

**- குடும்பத்தினர்.**

16, குமாரசாமி வீதி, ... [29253]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## 500 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

கொழும்பு, பெப். 4

இன்று சுதந்திரதினத்தை ஒட்டி ஐந்நூறு சிறைக் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படுகிறது. நீதி அமைச்சரின் சிபாரிசின் மீது ஜனாதிபதி விஜேதுங்கா இதற்கான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

---

ஓய்வூதிய---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

2,000 ரூபா வரை பெறுவோருக்கு — 125 ரூபா.
2,001 ரூபா தொடக்கம் 4,500 ரூபா வரை பெறுவோருக்கு — 100 ரூபா.
4,501 ரூபா தொடக்கம் 5,000 ரூபா வரை பெறுவோருக்கு — 125 ரூபா.
5,001 ரூபா தொடக்கம் 5,500 ரூபா வரை பெறுவோருக்கு — 150 ரூபா.
5,501 ரூபா தொடக்கம் 6,000 ரூபா வரை பெறுவோருக்கு — 175 ரூபா.
6,000 ரூபாவுக்கு அதிகமாக ஓய்வூதியம் பெறுவோருக்கு — 200 ரூபா.

இரண்டாவது இலக்கப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு மேலதிக அலவன்ஸ் பின்வருமாறு அமையும்:-

2,500 ரூபா வரை ஓய்வூதியம் பெறுவோருக்கு — 50 ரூபா.
2,501 ரூபா முதல் 4,500 ரூபா வரை ஓய்வூதியம் பெறுவோருக்கு — 75 ரூபா.
4,501 ரூபாவுக்கு அதிகமாக ஓய்வூதியம் பெறுவோருக்கு — 100 ரூபா.

ஓய்வூதியத் திணைக்கள 24/93 ஆம் இலக்க சுற்று நிருபத்தில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (அ-5)

---

## மரண அறிவித்தல்
### செல்வி

யாழ். ஆங்கில திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையின் உயர்தர வகுப்பு மாணவியும், விஜயரத்தினம் - சாந்தா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியுமான ஜெனிபர் செல்வமதி [செல்வி] நேற்றிரவு காலமானார். இறுதிக் கிரியைகள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
லியோ

16/1, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (சி/7178)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி. இராசமணி அருணாசலம்

சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி. இராசமணி அருணாசலம் 03.02.94 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற அருணாசலத்தின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி (கனடா), புவனேஸ்வரி (நுவரெலியா), மகாதேவா (மின்சாரசபை, சுன்னாகம்), விவேகானந்தா, யோகானந்தா (ஆசிரியர், றிபேக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தையா, நாகரத்தினம், பரமானந்தம், பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 03.02.94 வியாழக்கிழமை நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

மடத்தடி வீதி,
சாவகச்சேரி. (சி-7176)

---

### வ ஆனந்தமயில் (இ.போ.ச)

கொல்லன்கலட்டியைச் சேர்ந்த வயிரமுத்து ஆனந்தமயில் அவர்கள் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வாண உற்பத்தியாளர் வயிரமுத்து - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மூன்றாவது அருமைப் புதல்வரும், வரப்பிரசிங்கம் (தபால் உத்தியோகத்தர், தெல்லிப்பழை), இரத்தினசிங்கம் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), வரதராசா, திருமதி க. சோதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வரதலட்சுமியின் அன்புக் கணவரும், சுபகாவின் அன்புத் தந்தையும், கனகரத்தினத்தின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (4-2-94) பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றேன்.

தகவல்;
வ. வரப்பிரசிங்கம்

கந்தரோடை. (29262)

---

### அந்தோனி சிங்கராசா

(பிரபல கட்டடக் கலைஞரும், புனித அந்தோனியார் ஆலய முன்னாள் சங்கிலித்தாம்)

அந்தோனி சிங்கராசா நேற்று (3-2-94) காலமானார்.

இவர் ஆரோக்கியத்தின் அன்புக் கணவரும், திரு. தோ.சு. ஜோசேப் (இளைப்பாறிய தபால் அதிபர்) அவர்களின் பாசத் தந்தையும், அமிர்தநாதன் (ஆசிரியர், அச்சுவேலி மகா வித்தியாலயம்), ஜோட்ஜ் அன்ரனி, ஜோசவ் கொன்விக்ரர் (பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ. சங்கம்), றொபேட் வேதநாயகம் (சுவீடன்), யூலியற்ராணி (ஆசிரியர், சென் தோமஸ் மகளிர் பாடசாலை), மேரி கரோலின், யஸ்ரின் றெஜினோல்ட் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், லூர்த்தம்மா, அந்தோனியம்மா, கொலஸ்ரிக்கா புஸ்பவதி, மேரி கலைச்செல்வி, தங்கராணி (சுவீடன்), பசில் ராஜ்குமார் (சவுதி அரேபியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அன்ரன் ராஜசேகரன் (சுவீடன்), லோறன்ஸ் ராஜேந்திரகுமார் (லண்டன்), ஆன் இலங்காதேவி, டொறின், ஜெறின், மெல்டின், டிலக்கினி, டிவேந்தினி, கமிலஸ், நிரோஜினி, டிலக்சன், துஸ்யந் (சுவீடன்), ஜீவராசா, பெனடிற் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இன்று வெள்ளிக்கிழமை [4-2-94] பிற்பகல் 3 மணிக்கு அன்னாரது பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டபின் நல் அடக்கத்திற்காக கேணியடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. ஜோ. கொன்விக்ரர் (குணம்)
[மகன்]

புனித அந்தோனியார் ஒழுங்கை.
பருத்தித்துறை. [19261)

---

### வினாசித்தம்பி ஆறுமுகம்

(பிரபல குளியாப்பிட்டி வர்த்தகர்)

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 55/1 சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய வினாசித்தம்பி ஆறுமுகம் அவர்கள் 02-02-1994 அன்று குளியாப்பிட்டியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி - கண்ணம்மா ஆகியோரது மகனும், சரோசினியின் அன்புக் கணவரும், இராஜலஷ்மி, கலைநேசன் (ஈஸ்வரா ரேட் சென்ரர், குளியாப்பிட்டி), கோபாலகிருஷ்ணன் (கனடா) இராதாகிருஷ்ணன் (கனடா), தில்லைநேசன் (நில்மினி காமஸ், குளியாப்பிட்டி). விஜயலஷ்மி, சிவநேசன் (சிவசக்தி ஸ்ரோர்ஸ், குளியாப்பிட்டி), நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மகாலிங்கம் (முன்னாள் திட்டப் பணிப்பாளர், மாவட்ட புனர்வாழ்வுப் பகுதி, கிளிநொச்சி செயலகம், தற்போதைய உதவித்திட்டப் பணிப்பாளர், புனர்வாழ்வு, யாழ்ப்பாணம்), நாலினி, அருள்மதி (கனடா) விக்கினேஸ்வரன் (இலங்கை மின்சார சபை, தெஹிவளை) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெகா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஜெயப்பிரகாஷ் (சென். ஜோன்ஸ் கல்லூரிமாணவன்), லக்ஷிகா, சங்கர், கிரிஷ் (கனடா), ஜெயலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், சிவபாக்கியம், காலஞ்சென்ற வர்த்தகர் பசுபதிப்பிள்ளை, காலஞ்சென்ற காராளபிள்ளை, சின்னத்தங்கம், நாகம்மா, யாழ். வர்த்தகர் சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரரும், ஜெயராஜசிங்கம் (பிரான்ஸ்) புலேந்திரன் (பிரதிக் கல்விப்பணிப்பாளர் — யாழ்., நல்லூர் கோட்டங்கள்), காலஞ்சென்ற சௌந்தரராஜன், கோணேஸ்வரன் (முகாமைத்துவ ஆலோசகர், கூட்டுறவுக் கல்லூரி, கொழும்பு), சண்முகம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் குளியாப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் 06-02-1994 அன்று நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. மகாலிங்கம்
(மருமகன்)

55/1, சீனியர் லேன்,
கலட்டி,
யாழ்ப்பாணம். (29263)